# மாதிரி தேர்வு -2024
## பொருளியல்

நேரம் : 1:30 மொத்த மதிப்பெண் : 100

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: **40X1=40**

1) பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சினை---------------அ) எண்ணற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள் இ) பற்றாக்குறை ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி
2) பொருந்தா ஒன்றைக் கண்டறிக: அ) நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை ஆ) பொருளியல் கோட்பாடுகள் இ) பொருளாதார அறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும் ஈ) "மற்றவை மாறாதிருக்கும் போது"
3) நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர் அ) ஆல்பிரட் மார்ஷல் ஆ) ஆடம்ஸ்மித் இ) இலயனல் ராபின்ஸ் ஈ) பால் சாமுவேல்சன்
4) பயன்பாடு என்பது ------------- அ) தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப் புள்ளி ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி இ) பண்டங்களின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்
5) பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியது அ) விலைக்கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு
6) தனிக் கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை------அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை இ) இயல்புரை அறிவியல் ஈ) நெறியுறை அறிவியல்
7) இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர் யார்? அ)ஜே.ஆர் ஹிக்ஸ் ஆ) ஆர்.ஜி.டி ஆலன் இ) மார்ஷல் ஈ) ஸ்டிக்லர்
8) இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்த பயன்பாடு------------ அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக
9) கீழ்க்கண்ட விதியை தேவைவிதி அடிப்படையாகக் கொண்டுள்ளது. அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி ஆ) அளிப்பு விதி இ) சம இறுதிநிலை பயனபாட்டு விதி ஈ) காஸன் விதி
10) நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர் அ) ஆடம்ஸமித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ரிக்கார்டோ
11) காஸன் முதல் நிதி ------------என்றும் அழைக்கப்படுகின்றது அ) சமஇறுதிநிலை பயன்பாட்டு விதி ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி இ) தேவை விதி ஈ) குறைந்து செல் விளைவுவிதி
12) சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது-------------- அ)தரவரிசை ஆய்வு ஆ) இயல்பெண் ஆய்வு இ) பண்பளவை ஆய்வு ஈ) உளவியல் ஆய்வு
13) தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் ---------- அ) பெர்கூசன் ஆ) கீன்ஸ் இ) ஆடம்ஸ்மித் ஈ) மார்ஷல்
14) கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்? அ) வரி அதிகரிப்பதால் ஆ) அதிக மானியம் வழங்குவதால் இ) வட்டி வீதம் அதிகரிப்பதால் ஈ) மக்கள் தொகை குறைவதால்
15) நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயனபாடானது -------இருக்கும் அ) குறைவாக ஆ)எதிர்மறை இ) சமமாக ஈ) கூ:தலாக
16) சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்? அ) தரப்படுத்துதல் ஆ) எண்ணிக்கைப் படுத்துதல் இ) வார்த்தைப்படுத்துதல் ஈ) எதுவுமில்லை
17) முதன்மை உற்பத்திக் காரணிகளாவன அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம் இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு
18) ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையேயுள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது? அ)நுகர்வுச் சார்பு ஆ)உற்பத்தி சார்பு இ)சேமிபபு சார்பு ஈ)முதலீட்டு சார்ப
19) சம உற்பத்தி கோட்டின் வேறு பெயர் அ) நெகிழ்ச்சியற்ற அளிப்புக் கோடு ஆ) நெகிழ்ச்சியற்ற தேவைக் கோடு இ) சம இறுதிநிலை பயன்பாடு ஈ) சம உற்பத்தி கோடு
20) காப் டக்லஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாகக் கொண்டது? அ) வளர்ந்து செல் விகித விளைவு விதி ஆ) குறைந்து செல் விகித விளைவு விதி இ) மாறா விகித விளைவு விதி ஈ) மேற்காணும் அனைத்தும்
21) கீழ்க்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல? அ) குறை அளிப்பு ஆ) இயங்கும் தன்மையுடையது இ) பல வகைப்படும் ஈ) இயற்கையின் கொடை
22) உற்பத்தியாளர் சமநிலையை அடையும் புள்ளி எது? அ) இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம் விலை வீதத்தை விட அதிகமாக இருந்தால் ஆ) (**MRTS**) விலை வீதத்தை விட குறைந்தால் இ) (**MRTS**) ம் விலை வீதமும் சமமாக இருந்தால் ஈ) சமஉற்பத்தி கோடும் சம உற்பத்தி செலவுக் கோடும் வேறுபட்டியிருந்தால்
23) செலவு என்பது ---------அ) விலை ஆ) மதிப்பு இ) மாறாச் செலவு ஈ) உற்பத்தி

**24)** வெளியுறு செலவுகள் என்பது -------அ) கையிலிருந்து செய்யும் செலவுகள் ஆ) உண்மைச்செலவுகள் இ) சமூகச் செலவு ஈ) மூழ்கும் செலவுகள்

**25)** தனக்கு சொந்தமான வளங்களை நிறுவனத்திற்கு செய்யும் செலவு அ) உண்மைச்செலவு ஆ) வெளியுறு செலவு இ) பணச்செலவு ஈ) உள்ளுறு செலவு

**26)** ஒரு அலகு உற்பத்திக்கான செலவு அ) சராசரி ஆ) இறுதிநிலை இ) மாறும் ஈ) மொத்த

**27)** மொத்த மாறாச் செலவு 100 மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக. அ) 125 ஆ) 175 இ) 225 ஈ) 325

**28)** பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ----------வருவாயாகும். அ) இலாபம் ஆ) மொத்த இ)சராசரி ஈ) இறுதிநிலை

**29)** விலை நிலையாக இருக்கும்போது **AR** கோடு **MR** கோட்டுக்கு------ஆக இருக்கும் அ) சமமாக ஆ) அதிகமாக இ) குறைவாக ஈ) தொடர்பற்று

**30)** நிறுவனத்தின் சமநிலை என்பது அ) **MC=MR** ஆ) **MC>MR** இ) **MC<MR** ஈ) **MR=price**

**31)** விலையின் மற்றொரு பெயர் அ) சராசரி வருவாய் ஆ) இறுதிநிலை வருவாய் இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு

**32)** குழுச்சமநிலை ஆராய்வது ----- அ) முற்றுரிமை போட்டி ஆ) முற்றுரிமை இ) இருவர் முற்றுரிமை ஈ) தூயபோட்டி

**33)** விலை தலைமை அம்சம் கொண்டது --------அ) நிறைவுப்போட்டி ஆ) முற்றுரிமை இ) சில்லோர் முற்றுரிமை ஈ) முற்றுரிமையாளர் போட்டி

**34)** நிறைவுப்போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு ------ அ) நிலையானது ஆ) படுகிடை இ) எதிர்மறை சரிவு ஈ) நேர்மறை சரிவு

**35)** விற்பனை செலவிற்கு உதாரணம்------அ)கச்சாப்பொருள் விலை ஆ) போக்குவரத்துச் செலவு இ) விளம்பரச் செலவு ஈ) கொள்முதல் செலவு

**36)** பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு இ) கூலிக்கோட்பாடு ஈ) வட்டிக்கோட்பாடு

**37)** எதனைப் பயன்படுத்துவதற்கான வெகுமதியே வாரம் ஆகும்? அ) மூலதனம் ஆ) உழைப்பாளி இ) நிலம் ஈ) அமைப்பு

**38)** நிலத்திற்கு உண்மையானதும் அழிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தைப் பயன்படுத்தியவர் அ) **JS** மில் ஆ) வாக்கர் இ) கிளார்க் ஈ) ரிக்கார்டோ

**39)** பணக்கூலியின் வேறுபெயர் அ) உண்மைக்கூலி ஆ) பெயரளவுக்கூலி இ) சரியானக் கூலி ஈ) மாற்றுக்கூலி

**40)** முதலீட்டை பயன்படுத்துவதற்கான வெகுமதி அ) வாரம் ஆ) கூலி இ) இலாபம் ஈ) வட்டி

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **15x2= 30**

**41)** பண்டங்கள் என்றால் என்ன? 42) பொருளியல் என்றால் என்ன?

43. இயல்புரை அறிவியலின் இலக்கணம் வரையறு? 44. பயன்பாட்டை வரையறு?

**45.** சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?

**46.** கி∴பன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?

**47.** உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக. 48. உற்பத்தி சார்பினை குறிப்பிடுக

**49.** அளிப்பு கோடு மேல்நோக்கி செல்வதன் காரணம் என்ன?

**50.** வெளியுறு செலவு வரையறு? 51. உண்மைச் செலவு இலக்கணம் தருக.

52. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன? 53. அங்காடி வரையறு?

54. விற்பனை செலவு என்றால் என்ன? 55. உபரி சக்தி விளக்குக.

அனைத்து வினாக்களுக்கும் விடையளி : **10x3= 30**

55. அங்காடியின் இயல்புகள் யாவை? 56. விற்பனைச் செலவு என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.

**57. AC** மற்றும் **MC** க எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**58.** வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**59.** நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?

**60.** தொழில் முனைவோரின் பணிகள் யாவை?

**61.** காப்-டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.

**62.** சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை?

**63.** நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்குக.

**64.** தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.

**65.** பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?